சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 08

ந.க.எண் 3417/ஆ2/2022, நாள்.21.07.2022

பொருள் : தமிழ் வளர்ச்சித் துறை – 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தி பரிசுகள் வழங்குதல் – அவ்வகையில் (03.06.2022) அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு முடிய பயிலும் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி 27.06.2022 முதல் 30.06.2022 முடிய பள்ளியளவில் நடத்தப்பட்டது – சார்பு.

பார்வை :

1. சென்னை-08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 4484/ஆ.மொ.4/2022, நாள் 10.05.2022
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட 13.05.2022 மற்றும் 20.06.2022 நாளிட்ட கடிதங்கள்.
3. சென்னை-08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 4484/ஆ.மொ.4/2022, நாள் 12.07.2022

***************

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை-08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கு இணங்க தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டுசேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

மேலும், 2022 2023 ஆண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் (03.06.2022) பிறந்த நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி 20.06.2022 அன்று பள்ளியளவிலும் 24.06.2022 அன்று மாவட்ட அளவிலும் நடத்தி முடித்திடுமாறு பார்வை 2– ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இப்பேச்சுப்போட்டியினை பள்ளியளவில் 6 முதல் 12 ஆம் வகுப்பு முடிய பயிலும் மாணவர்களுக்கு 20.06.2022 க்குள் நடத்தி முதல், இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்பட்டியல் விவரத்தினை உடனடியாக சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிவைத்திடுமாறு அனைத்து அரசு/அரசு உதவி பெறும் / சென்னை / ஆதிநல உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிகளிலிருந்து பெறப்படும் மாணவர்களின் பெயர் பட்டியல்களை அதே கல்வி மாவட்டத்தில் மாவட்ட அளவில் போட்டி நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியலை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்ட ஆளுகையின் கீழுள்ள பள்ளிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்கு மேல் மிகாமல் இருக்கும் வகையில் பெயர் பட்டியல்களை 25.07.2022 அன்று மாலை 3.00 மணிக்குள் கீழ்க்காணும் மையங்களுக்கும் மற்றும் இவ்வலுவலக மின்னஞ்சலுக்கும் அனுப்பிவைத்திட மாவட்டக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இறுதிப் போட்டி கீழ்க்காண் மையங்களில் 28.07.2022 அன்று நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

1. மேற்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - மத்திய சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கும்.
2. கிழக்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - தென் சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்தற்கும்.
3. வட சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பெயர் பட்டியல்களை அதே மாவட்ட கல்வி அலுவலகத்திலும் ஒப்படைக்கப்படவேண்டும்.

| வ. எண். | இறுதி போட்டி நடைபெறவுள்ள மையங்களின் விவரம் | போட்டி நடைபெறும் பள்ளிகள் விவரம் | ஒருங்கிணைப்பாளர்கள் விவரம் |
|---|---|---|---|
| 1 | மத்திய சென்னை கல்வி மாவட்டம். | குழந்தைகள் தோட்டம் மேல்நிலைப் பள்ளி, மைலாப்பூர், சென்னை - 04 | தலைமை ஆசிரியர் கைப்பேசி எண்.9003195645 குழந்தைகள் தோட்டம் மேல்நிலைப் பள்ளி, மைலாப்பூர், சென்னை - 04 |
| 2 | தென் சென்னை கல்வி மாவட்டம் | ஸ்ரீ ஆர் கே எம் (மையம்) மேல்நிலை நிலைப் பள்ளி, தி.நகர், சென்னை -17. | தலைமையாசிரியர், கைப்பேசி எண்.9444203978 ஸ்ரீ ஆர் கே எம் (மையம்)மேல்நிலை நிலைப் பள்ளி, தி.நகர், சென்னை -17. |
| 3 | வட சென்னை கல்வி மாவட்டம் | டி.ஆர்.பி.சி.சி. மேல்நிலைப் பள்ளி, பெரம்பூர், சென்னை 11 தலைமையாசிரியர், | தலைமையாசிரியர், கைப்பேசி எண். 9840268090 டி.ஆர்.பி.சி.சி. மேல்நிலைப் பள்ளி, பெரம்பூர், சென்னை - 11 |

இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவ / மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. முதல் பரிசு ரூ.5000/– இரண்டாம் பரிசு ரூ.3000/– மூன்றாம் பரிசு ரூ. 2000/– வழங்கப்படவுள்ளது. மேலும், வெற்றி பெறும் அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/– வீதம் 2 பேருக்கு (2* 2000= 4000/–) வழங்கப்பெறும்.

பேச்சுப்போட்டிக்கான தலைப்புகள் போட்டி நடத்தப்பெறும் நாளன்று போட்டி நடைபெறும் நேரத்தில் அறிவிக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08

பெறுநர்
1. அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சென்னை மாவட்டம்.
2. கல்வி அலுவலர் ( சென்னை பெருநகர மாநகராட்சி) ரிப்பன் மாளிகை
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.